# www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!


| 12th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
|---|---|---|---|---|---|---|
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| 11th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
|---|---|---|---|---|---|---|
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| 10th Standard | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
|---|---|---|---|---|---|---|
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID –** Padasalai.net@gmail.com

# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 1

திமிர் தமிழமுது

செய்யுள், உரைநடை

எம்.ஏ. ஜெஸ்லைன் டின்

வகுப்பு: 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 25

I. பலவுள் தெரிக

பொருந்தித் தேர்க

1. அ) இரங்குகள் - 1. கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) விலங்குகள் - 2. மெய்ச்சுலை மறந்தன
இ) பறவைகள் - 3. குளிரால் நடுங்கின
ஈ) பசுக்கள் - 4. மரங்களிலிருந்து வீழ்ந்தன

அ) 4 3 2 1 ஆ) 3 1 4 2 இ) 3 2 1 4 ஈ) 2 1 3 4

2. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தன - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

3. நரம்புக்கின் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

4. சரியானதைத் தேர்க:
அ) துறை - கூதிர்பாசறை
ஆ) கன்னம் - கண்ணி
இ) வளைந்த கோல் - செங்கோல்
ஈ) திணை - புதுமழை

5. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது.
இ) காலநிலை மாறுபடுகிறது.
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

Scanned with CamScanner

பத்தாம் வகுப்பு

இயல் 7

இனிய தமிழமுது எம்.ஏ. ஜெயலஸ்டின்

6. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

7. ஜீன் 5-ஆம் தேதியோடு தொடர்புடையது
அ) உலகச் சுற்றுலா தினம் ஆ) உலகச் சுகாதாரத் தினம்
இ) உலகச் சுற்றுச் சூழல் தினம் ஈ) உலக மனித உரிமை தினம்.

II. எவையேனும் மூன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக 3x2=6

8. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
9. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
10. பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பணி என்ன?
11. இயற்கை சமநிலை என்றால் என்ன?

III. எவையேனும் இரண்டனுக்கு ஆறு வரியளவில் விடை தருக 2x4=8

12. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
13. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
14. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

IV. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக 1x4=4

15. 'வையகம் பனிப்ப' - எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடல்.

எம்.ஏ. ஜெயலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095
08-04-2020

Scanned with CamScanner

# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 1



[செய்யுள், உரைநடை]

திரு தமிழ்

விடைகள்

எம்.ஏ. ஜெஸ்டின்

வகுப்பு: 12

நேரம்: 40

மதிப்பெண்: 25

I. பலவுள் தெரிக 7x1 = 7

1. அ) 4 3 2 1
2. ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
3. இ) மழைத் துளிகள்
4. அ) துறை - கூதிர்பாசறை
5. அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.
6. ஆ) மணல் அள்ளுதல்
7. இ) உலகச் சுற்றுச் சூழல் தினம்.

II. ஏதேனும் மூன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக 3x2=6

8. மழைக்காலப் பகற்பொழுதில் சூரியனின் வெளிச்சம் இல்லாமல் நகரமானது மழைமேகத்தால் இருள் சூழ்ந்து காணப்படும். மழை பெய்து ஓய்ந்த பின்பு மழைக்கான சுவடுகள் அழிந்த பின்பு சூரியன் திடீரென தன் முகத்தைக் காட்ட மழை மேகத்தால் மறைந்திருந்த நகரம் பிரகாசமாய்க் காட்சியளிக்கின்றது. இன்னும் உறிஞ்சப்படாமல் இருக்கும் ஒரு சில மழைத்துளிகளின் மீது விழுகின்ற சூரியக் கதிர்களின் பிரதிபலிப்பால் நகரமே வெள்ளை வைரமாகக் காட்சியளிக்கின்றது.

9. * மரத்தின் சிறப்புகளை எடுத்துரைப்பேன்
* மரம் தரும் இதமான நிழல்; மண் அரிப்பைத் தடுக்கும் மரத்தின் மகத்தான செயல்; விண்துளி மண்ணில் விழ அடிப்படையாக விளங்கும் மரத்தின் தன்னிகரற்ற செயல்பற்றி எடுத்துரைப்பேன்.
* உயிர்வளிக்கு ஆதாரமாய், உயிர்வளி உற்பத்தியின் கொடைவள்ளலாய் இருக்கும் மரத்தின் ஒப்பற்ற செயல்களைப் பற்றி கூறுவேன்.

Scanned with CamScanner

10. புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்து செயலாற்றுவது பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பணி ஆகும்.

11. மழையினால் நிலத்தில் தாவரங்களும், விலங்கினங்களும் தோன்றின. இவை ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் உயிரினங்கள். இவை உணவுச் சங்கிலியால் பிணைக்கப்படுகின்றன. இதனை இயற்கைச் சமநிலை என்பர்.

III. எவையேனும் இரண்டனுக்கு ஆறுவரியளவில் விடைதருக 2x4=8

12. வாடைக் காலத்தில் வலப்பக்கமாக எழுந்த மேகமானது உலகம் குளிரும் புதுமழையினைப் பொழிந்தது. இதனால் தாழ்வான பகுதியில் வெள்ளம் பெருகியது. வெள்ளத்தை விரும்பாத கோவலர்கள் தாங்கள் மேய விட்டிருந்த எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை மேடான நிலங்களுக்கு அழைத்து சென்று மேயவிட்டனர்.

கோவலர்கள் தாங்கள் பழகிய நிலப்பகுதியை விட்டு புது இடத்தை அடைந்ததால் வருந்தினர். தண்ணீர் தாழ்வான பகுதியை நிரப்பிவிடும் என்பதால் தங்களுக்கும், தங்கள் ஆநிரைகளுக்கும் பாதுகாப்பு வேண்டி மேடான பகுதிக்குச் சென்றனர். நீர் துளிகள் மேலே படுவதாலும், வாடைக் காற்றின் குளிர்ச்சி மிகுதியாலும் உடலுக்குச் சூடேற்ற பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர்.

13. வெள்ளப்பெருக்கை எதிர்கொள்ளும் விழிப்புணர்வு பரப்புரையைச் செய்தல் வேண்டும். நீர்நிலைகளை முறையாகப் பராமரித்தலுடன் நீர்வழிப்பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு நீர்வழிப் பாதைகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும்.

இயற்கையாகவே பெருமழையைத் தாங்க கூடிய குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால், வாய்க்கால்கள் மற்றும் வெள்ளச்சமவெளிகளைச் சேதப்படுத்தாமல் இருப்பதே சிறப்பாகும். வெள்ளச்சமவெளிகளை முறையாகப் பராமரித்தால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது குறையும். மழை வெள்ளம் குறித்த போதிய விழிப்புணர்வைத் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மூலமாக அனைத்துப் பொதுமக்களுக்கும் கொடுத்தல் வேண்டும்.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்

14. நடுவண் அரசு 2005-ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது. புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.

மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர் காலங்களில் செயலாற்ற பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது.

---

## IV. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக 1×4=4

15.

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடிதழ்க் கண்ணிநீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க.

---

எம்.ஏ. ஜெயஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி
நாகர் கோவில் - 4
9843448095
08.04.2020

Scanned with CamScanner

# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 2

குமரி தமிழமுது

இலக்கணம், மொழிப்பயிற்சி, துணைப்பாடம்

எம்.ஏ. ஜெஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 25

I. பலவுள் தெரிக 7x1 = 7

1. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே

அ) அ∴றிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அ∴றிணை.

இ) விரவுத்திணை, அ∴றிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

2. பொருத்தி விடை தேர்க

அ) அவன் அவள் அவர் - 1. உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் - 3. தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் - 4. பதிலிடு பெயர்கள்

அ) 4 1 2 3. ஆ) 2 3 4 1 இ) 3 4 1 2 ஈ) 4 3 1 2

3. தமிழில் திணைப்பாகுபாடு ———— அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

4. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அ∴றிணை என்மனார் அவரல பிறவே" – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கணவிளக்கம்

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



5. சரியானதைத் தேர்க

அ) ஒவ்வொரு பள்ளிகளிலும் நூலகம் உள்ளது.

ஆ) ஒவ்வொரு பள்ளிகளிலும் நூலகம் உள்ளன.

இ) ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் உள்ளன.

ஈ) ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் உள்ளது.

6. உத்தம சோழன் 12 ஆண்டுகளாக நடத்திவரும் திங்களிதழ்

அ) கிழக்கே தெரியும் சூரியன்    ஆ) கிழக்கு வெளிச்சம்

இ) கிழக்கு வாசல் உதயம்    ஈ) கிழக்கு எப்போது விடியும்

7. 'முதல்கல்' கதையில் வரும் கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு

அ) நாற்பது வேலி    ஆ) அறுபது வேலி    இ) சக்கரைக்குழி    ஈ) இவற்றில் ஏதுமில்லை.

II. எவையேனும் இரண்டனுக்கு இரண்டு அல்லது மூன்று வரியளவில் விடை தருக    2x2 = 4

8. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

9. இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்களின் வினைமுடிவு இருதிணை பெற்று வருவதற்குச் சான்று தருக.

10. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

III. அனைத்திற்கும் விடையளி    4x2 = 8

11. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

அ) அலை, அளை, அழை

ஆ) தலை, தளை, தழை

12. ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழாக்கம் தருக.

அ) Soil erosion    ஆ) Social forestry Schemes

13. 'பொறுத்து' - இச்சொல்லின் வேர்ச்சொல், வினைமுற்று, பெயரெச்சம், தொழிற் பெயர் ஆகியவற்றை எழுதுக.

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

14. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொல் தருக.

அ) Metro Train ஆ) Railway signal.

IV. இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக 1x6=6

15. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

எம். ஏ. ஜெஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கிறிஸ்டல் மேனிலைப் பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095.
10-04-2020

Scanned with CamScanner

# இயல் - 2



## உள்நிலைத் தேர்வு - 2

இலக்கணம், மொழிப்பயிற்சி, துணைப்பாடம்

குமரி தமிழருவி

எம். ஏ. ஜெஸ்டின்

விடைகள்

வகுப்பு: 12

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண்: 25

I. பலவுள் தெரிக 7×1 = 7

1. ஆ) உயர்திணை, அஃறிணை
2. அ) 4 1 2 3
3. அ) பொருட்குறிப்பு
4. இ) தொல்காப்பியம்
5. ஈ) ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் உள்ளது
6. இ) கிழக்கு வாசல் உதயம்
7. ஆ) அறுபது வேலி

II. ஏதேனும் இரண்டனுக்கு இரண்டு அல்லது மூன்று வரியளவில் விடை தருக 2×2 = 4

8. * நீங்கள் வீட்டிற்கு வாருங்கள்
   * அவர்கள் ஆலயம் வந்தார்கள்

9. * குழந்தை சிரித்தான்.
   குழந்தை சிரித்தது.
   * கதிரவன் உதித்தான்.
   கதிரவன் உதித்தது.

Scanned with CamScanner

10. * மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன; திணை, பால், எண், இடம் ஆகியனவாகும்.

III. அனைத்திற்கும் விடையளி 4×2=8

11.
அ) அலை - நீர்நிலை ; அளை - புற்று/தயிர்/பிசை ; அழை - கூப்பிடு

கடலலையில் குளிக்க சென்று வருவதாகக் கூறிய குமரன் அளையில் இருந்த அரவம் தீண்ட எத்தனை முறை அழைத்தும் பேச்சுமூச்சின்றிக் கிடந்தான்.

ஆ) தலை - முதன்மை/சிரசு ; தளை - விலங்கு/கட்டுதல் ; தழை - புல்/இலை

திருட்டுத்தனமாகப் பசுவிற்குத் தழை பறிக்க போன இடத்தில் தலைதட்டி கீழே விழுந்தவனைத் தோட்டக்காரன் தளையிட்டு ஊர்த்தலைவரிடம் கூட்டிச் சென்றான்.

12.
அ) மண்ணரிப்பு
ஆ) சமூக காடுகள் வளர்ப்புத் திட்டம்.

13. வேர்ச்சொல் - பொறு
வினைமுற்று - பொறுத்தான் / பொறுத்தாள் / பொறுத்தார்.
பெயரெச்சம் - பொறுத்த
தொழிற்பெயர் - பொறுத்தல்.

14. அ) மாநகரத் தொடர் வண்டி
ஆ) தொடர்வண்டி வழிக்கிறி

Scanned with CamScanner

குமரி தமிழமுது — எம். ஏ. ஜெயலஸ்டின்

IV. இருபக்கங்களுக்கு மிகாமல் விடைதருக. 1×6=6

15. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத்தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

முன்னுரை:

உத்தம சோழன் எழுதிய 'முதல்கள்' என்ற சிறுகதையின் கதாபாத்திரம் மருதன். ஊர்நலன் கொண்டவன். பெருமழை பெய்து வெள்ளமானது வடியாமல் இருப்பதைப் பார்த்து, எல்லோரும் இணைந்து செயல்பட்டால் வெள்ளத்தில் மூழ்கும் நெற்பயிர்களைக் காப்பாற்றி விடலாம் என்ற எண்ணத்தில் செயல்பட்ட மருதனின் பண்பு நலன்களைக் காண்போம்.

பயிர்களின் பாதுகாவலன்

காவிரியின் கடைமடைக்காரர்கள் 'குறுவை'யை மறந்து 'சம்பா' நட்டு தண்ணீருக்காக, எந்தத் தண்ணீரை நம்பியிருந்தார்களோ அஃது இப்போது பெருமழையாகக் கொட்டித்தீர்த்த பிறகு, இப்போதுதான் வளர ஆரம்பித்திருந்த நெற்பயிர்கள் எல்லாம் தண்ணீரில் மூழ்குவதைக் கண்டதும் மனம் வேதனை அடைகின்றான்.

ஒவ்வொரு நபர்களிடம் கூறியும் அன்று இரவுவரை எதுவுமே நடக்கவில்லை என்று அவனது மனம் வேதனை அடைகின்றது. இரவு தூங்கும் போது தூக்கம் வரவில்லை. நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த நெல் பயிர் அத்தனையும் "என்னைக் காப்பாத்து, என்னைக் காப்பாத்து", என்று அவனைப் பார்த்து கெஞ்சுவதாக உணர்கிறார்.

ஊர்நலனில் அக்கறை:

வடிவாய்க்கால் முழுவதும் சுவர் வைத்தாற்போலத் தடுத்திருந்த காட்டாமணக்குச் செடிகளை அப்புறப்படுத்திவிட்டால், பயிர்கள் மூழ்காமல் மொத்த கிராமத்தையும் காப்பாற்றலாம் என்ற எண்ணம் வந்ததும், மருதன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எப்படியாவது உபரி நீரை ஒரே நாளில் வடித்து ஊரைக் காப்பாற்றிவிடலாம் என்ற எண்ணம் அவனிடம் வந்ததும் அவன் தனிமையாக அந்தச் செயலைச் செய்யாமல் அனைவருடனும் இணைந்து செய்ய வேண்டும் என்ற தீர்வும்



Scanned with CamScanner

மேலிட ஒவ்வொருவரிடமும் உதவியைக் கேட்கும் உத்தம குணம் கொண்டவனாக மருதன் திகழ்கிறான்.

**கடமையே கண்ணாகக் கொண்டவன்:**

உதவிக்காக அவன் மாரியிடம் கேட்கும் போதும்; பெரிய மிராசாக வலம் வரும் கானிப்பனிடம் பேசும்போதும்; கிராமத்தின் முதல் பட்டதாரியான பிரேம்குமாரிடம் விவரத்தை விளக்கும் போதும்; தன் ஆற்றாமையைத் தன் மனைவி அல்லியிடம் கூறும்போதும் அவன்தன் கடமையில் கொண்டிருந்த உறுதிப்பாடு புலனாகும். தான் தனியாளாகச் செய்ய முடியாத இச்செயலுக்கு எல்லோரின் உதவியையும் நாடும் பொதுநலவாதியாக மருதன் காணப்படுகின்றான்.

**மருதனின் பொறுப்பாண் குணம்:**

தனக்கென அந்த ஊரில் ஒரு 'சக்கரைக்குழி' அளவுகூட நிலம் இல்லாதவன் பொதுநலனைக் கருத்தில் கொண்டு, எப்படியாவது நீரை வடித்துவிட வேண்டும் என்ற ஆதங்கத்துடன் இருக்கின்றான். மருதன் சுயநலத்திற்காகச் செயல்படவில்லை, மாறாகப் பொறுப்பற்றிருந்த அவ்வூர் மக்களுக்குப் பொறுப்பு வரவேண்டும் என்ற எண்ணமே அவனிடம் இருந்தது.

**பொறுப்பை உணர்த்திய வழிகாட்டி:**

இரவு முழுவதும் தூக்கமில்லாமல் தவித்தவன். விடிவதற்குமுன் தனியாளாய் வடிவாய்க்காலில் இறங்கி காட்டாமணக்குச் செடியை அப்புறப்படுத்தும் அவனது செயலைக் கண்ட அவன் மனைவி அல்லியும் உடன் உதவிக்கு வர, இதை பார்க்கும் வலைபோட்டுக் கொண்டிருந்த மாரிமுத்துவும் அவனுடன் இணைய, மிராசு கானியப்பனும் வடிவாய்க்காலில் இறங்க ஊரே ஒன்றாகக் கூடிவந்து காட்டாமணக்குச் செடியை ஆர்வமாக அப்புறப்படுத்த வழிகாட்டினான் மருதன்.

**முடிவுரை:**

சொல்லிக்கொண்டிருக்காமல் நாமே செயலில் இறங்கினால் வெற்றி பெறலாம் என்ற உயர்ந்த குணம் உடையவனாக மருதன் விளங்குகின்றான். நமக்கு ஏன் வீண் வம்பு என்று ஒதுங்காமல் பொறுப்பற்றிருந்த கிராம மக்களுக்குப் பொறுப்பை உணர்த்தினான் மருதன்.

எம்.ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கிறிஸ்து மேனிலைப்பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095
10-04-2020

Scanned with CamScanner

# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 3

### செய்யுள், உரைநடை, இலக்கணம், மொழிப்பயிற்சி, துணைப்பாடம்

### ஒரு மதிப்பெண் கேள்விகள்

குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெலஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண்: 25

I. பலவுள் தெரிக 11×1 = 11

1. அய்யப்ப மாதவன் வெளியிட்ட கவிதைக் குறும்படம்

அ) ஓசை ஆ) நேற்று இ) காலை ஈ) இன்று

2. பொருத்தித் தேர்க

அ) நரம்புக்குள் மீட்டுதல் - 1. நகரம்
ஆ) வைரம் - 2. ஒளிக்கதிர்
இ) சங்கீதம் - 3. பறவைகள்
ஈ) உதடுகள் - 4. வீணை

அ) 4 2 1 3 ஆ) 4 1 3 2 இ) 4 3 2 1 ஈ) 1 2 3 4

3. 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்' என்னும் விதிப்படி அமைந்த சொல்

அ) புதுப்பெயல் ஆ) கொடுங்கோல் இ) மாமேயல் ஈ) இணநிரை

4. நரம்புகளுள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

5. பசுமைக்குடில் வாயுக்களில் பொருந்தாத வாயு எது?

அ) ஓசோன் ஆ) மீத்தேன் இ) நீர்வாயு ஈ) ஹைட்ரஜன்

6. கூற்று : வெள்ளச்சமவெளி என்பது ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய காப்பரணாகும்.

விளக்கம் : பெருவெள்ளக் காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் இருக்க இயற்கையாகவே அமைந்தவையே வெள்ளச்சமவெளிகள்.

Scanned with CamScanner

எம்.ஏ. ஜோஸ்டின்

அ) கூற்று சரி விளக்கம் தவறு ஆ) கூற்று தவறு விளக்கம் சரி

இ) கூற்று தவறு விளக்கம் தவறு ஈ) கூற்று சரி விளக்கம் சரி

7. பொருத்தமான நிறுத்தற்குறியுடைய சொற்றொடரைக் கண்டுபிடி

அ) வெள்ளைச் சுவரொளிகள் இன்றும் இருக்கின்றனவா ?

ஆ) வெள்ளைச் சுவரொளிகள் இன்றும் இருக்கின்றனவா.

இ) 'வெள்ளைச் சுவரொளிகள் இன்றும் இருக்கின்றனவா!'

ஈ) வெள்ளைச் சுவரொளிகள் இன்றும் இருக்கின்றனவா!

8. 'அவர்கள்' என்னும் சொல் பன்மைப் பொருளை உணர்த்தும் ———.

அ) பதிலிடு வினைச்சொல் ஆ) பதிலிடு பெயர்ச்சொல்

இ) பெயர்ச்சொல் ஈ) வினைச்சொல்

9. சரியானதைத் தேர்க

அ) பதிலிடு வினைச்சொல் - அவர்கள்

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - உளப்படுத்தாத தன்மைப் பன்மை

இ) பத்துமரம் வீழ்ந்தது - ஒருமை பன்மை வேறுபாடு எழுவாயில் வெளிப்படவில்லை

ஈ) யார்? எது? - விரவுத்திணை, அஃறிணை

10. 'முதல்கல்' சிறுகதை ஆசிரியரின் இயற்பெயர்

அ) செல்வமுத்து ஆ) செல்லத்துரை இ) செல்லக்கண்ணு ஈ) செல்வராஜ்

11. பொருந்தாததைத் தேர்க

அ) வில்வண்டி - காரியப்பன்

ஆ) அல்லி - மருதன்

இ) மாட்டுக்கு உணவு - பூவரச இலை

ஈ) காட்டாமணக்குச் செடி - வடிவாய்க்கால்

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



II. அனைத்திற்கும் விடையளி : 7×2 = 14

12. இலக்கணக் குறிப்புத் தருக

அ) பெய்யா ஆ) வளை இ

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக

அ) கலங்கி ஆ) மறப்ப

14. புணர்ச்சி விதி தருக

அ) இனநிரை ஆ) புதுப்பெயல்

15. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

அ) கலை, களை, கழை ஆ) விலை, விளை, விழை

16. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழாக்கம் தருக

அ) Deforestatio ஆ) Level Crossing

17. விடைக்கேற்ற வினா தருக

அ) தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர் மாயூரம் வேதநாயகம் ஆவார்.

ஆ) இந்திய வானிலை ஆய்வுத்துறையினர் 2009 - ஆம் ஆண்டைக் கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்தனர்.

18. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.

அ) சொல்ற விதத்திலே சொன்னா எல்லாரும் கேப்பாங்க.

ஆ) "வாஸ்தவம்தான்... அதுக்கு என்ன என்னப் பண்ணச் சொல்றா?"

எம்.ஏ. ஜெஸ்லஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095
11/04/2020

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 3

செய்யுள், உரைநடை, இலக்கணம், மொழிப்பயிற்சி, துணைப்பாடம்

ஒரு மதிப்பெண் கேள்விகள்

விடைகள்

குமரி தமிழமுது — எம்.ஏ. நெல்சன் மணி

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண் : 25

I. பலவுள் தெரிக 11×1=11

1. அ) இன்று
2. ஆ) 4 1 3 2
3. அ) இணைநிரை
4. இ) மழைத்துளிகள்
5. அ) வைரமுத்து
6. அ) கூற்று சரி விளக்கம் சரி
7. ஆ) வெள்ளைச் சமவெளிகள் இன்னும் இருக்கின்றனவா?
8. ஆ) பதிலிடு பெயர்ச்சொல்
9. ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் – உளப்படுத்தாத தன்மைப் பன்மை
10. அ) செல்வராஜ்
11. இ) மாட்டுக்கு உணவு – பூவரசு தழை

II. அனைத்திற்கும் விடையளி 7×2=14

12. இலக்கணக் குறிப்பு

அ) பெய்யா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

ஆ) வளைக்கை – சொல்லிசை அளபெடை

Scanned with CamScanner

ஸ்ரீமதி தமிழ்செல்வி

எம்.ஏ. ஜெவஸ்டின்

13. பகுபத உறுப்பிலக்கணம்

அ) கலங்கி - கலங்கு + இ
கலங்கு - பகுதி
இ - வினையெச்ச விகுதி

ஆ) மறப்ப - மற+ப்+ப்+அ
மற - பகுதி
ப் - சந்தி
ப் - எதிர்கால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி.

14. புணர்ச்சி விதி

அ) இனநிரை - இனம்+நிரை
'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்'
இனநிரை

ஆ) புதுப்பெயல் - புதுமை + பெயல்
(i) 'ஈறு போதல்' - புது + பெயல்
(ii) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்'
புதுப் பெயல்

15. அ) கலை, களை, கழை
கலை - நுட்பம் / ஆடை / கல்வி / கலைமான்
களை - நீக்கு / அழகு
கழை - மூங்கில்
கழை காட்டில் தீப்பிடித்ததால் களை செடிகளுடன் சேர்ந்து கலைமான்களும் தீக்கிரையாகின.

ஆ) விலை, விளை, விழை
கார் பருவத்தில் நன்றாக விளைந்ததால் தானியங்களின் விலை குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விழைவதாக அரசு அறிவித்தது.

16. அ) காடழிப்பு
ஆ) இருப்புப் பாதையைக் கடக்குமிடம்

Scanned with CamScanner

17. அ) தமிழின் முதல் நாவல் எது? அதனை இயற்றியவர் யார்? (அல்லது) மாயூரம் வேதநாயகம் அவர்கள் இயற்றிய நாவல் எது? அதன் சிறப்பு யாது?

ஆ) இந்திய வானிலை ஆய்வுத்துறையினர் 2009-ஆம் ஆண்டைக் குறித்து அறிவித்தது என்ன?

18. அ) சொல்லுகின்ற முறையில் சொன்னால் எல்லாரும் கேட்பார்கள்

ஆ) உண்மைதான் அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?

எம்.ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப்பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095

11/04/2020

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 4

### செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம், மொழிப்பயிற்சி

வகுப்பு : 12
நேரம் : 40 நிமிடம்
பொதுத் தமிழ்

மதிப்பெண் : 40
எம்.ஐ. ஜெயலட்சுமி

I. பலவுள் தெரிக — 24×1 = 24

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

2. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல்தொடர் இ) இடைச்சொல்தொடர்
ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

3. கூற்று 1 : வெயில் கண்ட பறவைகள் மகிழ்ச்சியால் இரை தேடின
கூற்று 2 : நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு

4. பொருத்தமான நிறுத்தற்குறியுடைய சொற்றொடரைக் கண்டுபிடிக்கவும்
அ) 'மழை' தொடர்பான கவிதைகளைத் தொகுத்து; இதழ் உருவாக்குக.
ஆ) "மழை" தொடர்பான கவிதைகளைத் தொகுத்து இதழ் உருவாக்குக.
இ) 'மழை' தொடர்பான கவிதைகளைத் தொகுத்து இதழ் உருவாக்குக.
ஈ) மழை, தொடர்பான கவிதைகளைத் தொகுத்து இதழ் உருவாக்குக.

5. பொருத்தித் தேர்க
அ) குரங்குகள் - 1. கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) பசுக்கள் - 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் - 3. குளிரால் நடுங்கின
ஈ) விலங்குகள் - 4. மேய்ச்சலை மறந்தன
அ) 1 3 4 2 ஆ) 3 1 4 2 இ) 3 2 1 4 ஈ) 2 1 3 4

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

6. பொருந்தாததைத் தேர்க

அ) வலனேர்பு - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

ஆ) கொடுங்கோல் - ஈறுபோதல், இனமிகல்

இ) இனநிரை - மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்

ஈ) புதுப்பெயல் - ஈறுபோதல், இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.

7. ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர் - 'கொடுங்கோல்' என்ற சொற்றொடர் உணர்த்தும் பொருள்

அ) கொடுமையான கோல் ஆ) நீளமான கோல்

இ) ஆயர்களின் செங்கோல் ஈ) வளைந்த கோல்

8. சொல்லிசை அளபெடைக்கு உரிய சொல்

அ) படுஉ ஆ) நிறுத்தல் இ) வளைஇ ஈ) இவற்றில் ஏதுமில்லை

9. நெடுநல்வாடை நூலின் மொத்த அடிகள்

அ) 186 ஆ) 188 இ) 198 ஈ) 196

10. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

11. நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்கவைப்பதில் இதனுடைய பங்கு மிகவும் முக்கியமானது.

அ) கிணறு ஆ) ஆழ்துளை கிணறு இ) ஊற்று ஈ) மணல்

12. கூற்று 1 : பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் நாடுகளில் ஒன்று இங்கிலாந்து.
கூற்று 2 : உலகில் நாற்பது விழுக்காடு மக்கள் தண்ணீர் பற்றாக்குறையோடு வாழ்ந்து வருகின்றனர்.

அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று 1 தவறு 2 சரி

இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் தவறு

13. மாற்று ஆற்றல்களாக விளங்க கூடியவற்றைக் கண்டறிக.
(i) தாவர ஆற்றல் (ii) ஹைட்ரஜன் ஆற்றல் (iii) சூரிய ஆற்றல் (iv) காற்று ஆற்றல்

அ) i, ii - சரி ஆ) iv - தவறு இ) i, ii, iii, சரி ஈ) அனைத்தும் சரி

Scanned with CamScanner

14. பொருந்தாததைத் தேர்க
அ) சீனா - பசுமைக்குடில் வாயு
ஆ) கவின்மலர் - கலந்துரையாடலில் பங்கேற்றவர்
இ) மழைத்துளி - மனிதவாழ்வின் பேரின்பம்
ஈ) நைட்ரஸ் ஆக்சைடு - கார்பன் அற்ற ஆற்றல்

15. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது.
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.
ஆ) பசுமைக் குடில் வாயுக்கள் அதிகமாகிறது
இ) காலநிலை மாறுபடுகிறது
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

16. 'புவி வெப்பமடைதல்' மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே' என்றவர்.
அ) கிங் சார்லஸ் ஆ) புரூஸ் டேவிட் இ) டேவிட் கிங் ஈ) இவர்களில் எவருமில்லை

17. சரியானதைத் தேர்க
அ) திசி படர்ந்த ஆண்டு - 2009
ஆ) 250 செ.மீ மழை - 'லே'
இ) 994 செ.மீ மழை - மும்பை
ஈ) பசுமைக்குடில் வாயு - மீத்தேன்

18. 'முதல் கல்' சிறுகதை இடம் பெற்ற தொகுப்பு
அ) தஞ்சை சிறுகதைகள் ஆ) வல்லமை தாராயோ
இ) குருவி மறந்த கூடு ஈ) பாமரசாமி

19. உத்தம சோழன் எழுதிய புதினம்
அ) குருவி மறந்த கூடு ஆ) கசக்கும் இனிமை
இ) மனிதத்தீவுகள் ஈ) கிழக்கு வாசல் உதயம்

20. 'நாகூர் பிச்சை' என்ற இயற்பெயர் பெற்றவர்
அ) செல்வராஜ் ஆ) பிரேம்குமார் இ) காளியப்பன் ஈ) மாரிமுத்து

21. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே ______.

அ) அஃறிணை, உயர்திணை  ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை  ஈ) விரவுத்திணை, உயர்திணை

22. தமிழில் பொருட்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு ______ பாகுபாடு அமைந்துள்ளது.

அ) இடம்  ஆ) பால்  இ) இருதிணை  ஈ) எண்

23. தமிழில் திணைப்பாகுபாடு ______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு  ஆ) சொற்குறிப்பு  இ) தொடர்க்குறிப்பு  ஈ) எழுத்துக்குறிப்பு

24. பொருத்தித் தேர்க

அ) அவன் அவள் அவர் - 1. உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் - 3. தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் - 4. பதிலிடு பெயர்கள்

அ) 4 1 2 3  ஆ) 2 3 4 1  இ) 3 4 1 2  ஈ) 4 3 1 2

II. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக  1×4=4

25. 'வையகம் பனிப்ப' - என்னும் நெடுநல்வாடை பாடல்

III. அனைத்திற்கும் விடை தருக  3×4=12

26. வாகைத்திணையைச் சான்றுடன் விளக்குக.

27. கீழ்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி சிறப்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா !

28. கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக.

பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்
நாள் : அக்டோபர் 2 நேரம் : காலை 10 மணி
இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை.

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை : திருமதி அறிசி,
செந்தமிழ்ச் சங்க ஒருங்கிணைப்பாளர்

முன்னிலை : திரு. அமுதன், இயற்கை வேளாண் உழவர்

தலைமையுரை : திரு. இமயவரம்பன்
பேரிடர் மேலாண்மை இயக்குநர்

கருத்தரங்கத் தலைப்புகள்

* இயற்கைச் சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும் - முனைவர் செங்குட்டுவன்
* பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் - திரு. முகிலன்
* நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல் - திருமதி பாத்திமா
* பேரிடர்க்காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும் - திரு. வின்சென்ட்

நன்றியுரை : பர்வீன், பசுமைப்படை மாணவர் தலைவர்

நாட்டுப்பண்.

எம்.ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி,
நாகர்கோவில் - 4
9843448095
14/04/2020

Scanned with CamScanner

# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 4

### செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம், மொழிப்பயிற்சி

### விடைகள்

குளிர்தமிழ்கு

எம்.ஏ. ஜெலஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 40

I. பலவுள் தெரிக 24x1 = 24

| | | |
|---|---|---|
| 1. | இ) | மழைத்துளிகள் |
| 2. | ஈ) | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| 3. | இ) | கூற்று 1 தவறு 2 சரி |
| 4. | இ) | 'மழை' தொடர்பான கவிதைகளைத் தொகுத்து இதழ் உருவாக்குக. |
| 5. | ஆ) | 3 1 4 2 |
| 6. | அ) | வலனேர்பு – உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் |
| 7. | ஈ) | வளைந்த கோல் |
| 8. | இ) | வளைஇ |
| 9. | ஆ) | 188 |
| 10. | ஆ) | மணல் அள்ளுதல் |
| 11. | ஈ) | மணல் |
| 12. | ஆ) | கூற்று 1 தவறு 2 சரி |
| 13. | ஈ) | அனைத்தும் சரி |
| 14. | ஈ) | நைட்ரஸ் ஆக்சைடு – கார்பன் அற்ற ஆற்றல் |
| 15. | அ) | கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது. |
| 16. | இ) | டேவிட் கிங் |
| 17. | ஈ) | பசுமைக்குடில் வாயு – மீத்தேன். |

Scanned with CamScanner

நிமிர் தமிழமுது        எம்.ஏ. ஜெலஸ்டின்

18. அ) தந்தை சிறுகதைகள்
19. ஆ) கசக்கும் இனிமை
20. ஆ) பிரேம் குமார்
21. ஆ) உயர்திணை, அஃறிணை
22. இ) இருதிணை
23. அ) பொருட்குறிப்பு
24. அ) 4 1 2 3

II. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக        1×4 = 4

25.

| | | | |
|---|---|---|---|
| வையகம் | பனிப்ப | வலனேர்பு | வளைஇப் |
| பொய்யா | வானம் | புதுப்பெயல் | பொழிந்தென |
| ஆர்கலி | முனைஇய | கொடுங்கோல் | கோவலர் |
| ஏறுடை | இனநிரை | வேறுபுலம் | பரப்பிப் |
| புலம்பெயர் | புலம்பொடு | கலங்கிக் | கோடல் |
| நீடிதழ்க் | கண்ணிநீர் | அலைக் | கலாவ |
| மெய்க்கொள் | பெரும்பனி | நலிய | பலருடன் |
| கைக்கொள் | கொள்ளியர் | கவுள்புடையூஉ | நடுங்க. |

III. அனைத்திற்கும் விடை தருக        3×4 = 12

26. வாகைத்திணை

திணை விளக்கம் :

வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணை ஆகும்.

Scanned with CamScanner

சான்று :

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்' - எனத் தொடங்கும்

திணைப் பொருத்தம் :

வாடைக்காலத்தில் மேகம் வலப்பக்கமாகச் சூழ்ந்து இந்நில உலகம் குளிரும்படி மழையாகப் பெய்தது. வாடைக் காற்றின் குளிர்ச்சியினால் ஆயர்கள் சேர்ந்து உடலுக்குச் சூடேற்ற கொள்ளி நெருப்பின் மேல் கைகளை நீட்டினர். அத்தகைய குளிர்ச்சியான நேரத்தில் மன்னனும் கூடாரப்பாசறையில் அமர்ந்து தன் வெற்றியைக் கொண்டாடினான் என்பதால் இப்பாடல் வாகைத்திணையைச் சார்ந்ததாகும்.

---

27. இலக்கிய நயம் பாராட்டுக.

மையக் கருத்து :

பெருங்காற்றுடன் பலத்த இடியோசையுடன் மேகம் பொழியும் மழையும் இசைத்தாளத்திற்கு ஏற்ப மண்ணை வந்து அடைகின்றது. மழை விழும் ஓசை இனிய தாளத்தைத் தருகின்றது.

தொடைநயம் :

மோனை நயம் : முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனையாகும்

சீர்மோனை : வெட்டியடிக்குது - வீரத் - விண்ணை
கொட்டி - கூவென்று - இடையுது - காற்று
சட்டச்சட - சட்டச்சட
எட்டுத்திசையும் - எற்றுவனம்

எதுகை நயம் : முதலெழுத்து அளவு ஒத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

சீர் எதுகை : சட்டச்சட - சட்டச்சட

அடி எதுகை : வெட்டியடிக்குது
கொட்டி
சட்டச்சட
எட்டுத்திசையும்

Scanned with CamScanner

எம்.ஏ.ஜெஸ்டின்

குமரி தமிழமுது

**சொல்நயம்:**

பாரதியார் இப்பாடலில் பயன்படுத்தியிருக்கும் சொற்களின் ஒலியும் பொருளும் ஒரு பெரும்புயலையே நம் கண்முன் காட்டுவனவாக உள்ளன. புதிய ஒலியின்பத்தையும் புதிய பொருளுணர்ச்சியையும் பாரதியார் இப்பாடலில் பயன்படுத்தியுள்ளார்.

**அணிநயம்:**

மழையின் சிறப்பை உணர்த்த மழை பெய்வதற்கு முன்னால் நிகழும் நிகழ்வுகளை எல்லாம் உயர்வாகக் கூறியுள்ளதால் இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி இடம்பெற்றுள்ளது.

**சந்தநயம்:**

ஏற்ற இசைக்கருவியுடன் இசைத்துப் பாடினால் பாடுவோர்க்கும் கேட்போரும் மிகுந்த இன்பம் தரும் விதத்தில் தாளநயத்துடன் பாரதியார் இப்பாடலைப் பாடியுள்ளார். இப்பாடல் சிந்துப்பா வகையைச் சார்ந்தது.

---

28. பத்தியாக மாற்றுக

அக்டோபர் மாதம் 2-ஆம் நாள் காலை 10 மணிக்கு, சென்னை கலைவாணர் அரங்கில் பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கிற்கு இயற்கை வேளாண் உழவர் திரு. அமுதன் முன்னிலை வகிக்கிறார். இக்கருத்தரங்கில் முனைவர் செங்குட்டுவன் அவர்கள் இயற்கைச் சீற்றங்களும் பருவகால மாற்றங்களும் என்ற தலைப்பிலும், திரு. முகிலன் அவர்கள் பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் என்ற தலைப்பிலும், திருமதி. பாத்திமா அவர்கள் நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல் என்ற தலைப்பிலும், திரு. வின்சென்ட் அவர்கள் பேரிடர்க் காலங்களில் செய்யக் கூடியதும் செய்யக் கூடாததும் என்ற தலைப்பிலும் கருத்துகளைத் தர உள்ளார்.

கருத்தரங்கின் நிறைவாக, பேரிடர் மேலாண்மை இயக்குநர், திரு. இமயவரம்பன் அவர்கள் தலைமையுரை ஆற்றுவார்கள். நிகழ்ச்சிக்கு வருகின்றவர்களைச் செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் திருமதி. அரசி அவர்கள் வரவேற்க உள்ளார். பசுமைப்படை தலைவர் பர்வீன் அவர்கள் நன்றியுரை ஆற்றிட உள்ளார். தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துடனும், கருத்தரங்க நிறைவில் நாட்டுப்பண்ணுடனும் நிகழ்ச்சி நிறைவடையும், அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

எம்.ஏ.ஜெஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095
14 04/2020

Scanned with CamScanner

# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 5

## மொழிப்பயிற்சி

இனிதமிழமுது

எம்.ஏ. ஜெஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம் மதிப்பெண் : 30

I. அனைத்திற்கும் விடை தருக 9x2 = 18

1. தமிழ்ச்சொல் தருக

அ) enlighten ஆ) Environmental devastation

2. தமிழ்ச்சொல் தருக

அ) Plat form ஆ) Ticket Inspector

3. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

அ) அலை, அளை, அழை ஆ) கலை, களை, கழை

4. புதிர்க்கேற்ற விடையை அறிக

அ) அடை மழை பெய்த அடுத்த நாள்
படைபடையாய் வந்ததாம்
பரங்கி நாட்டு விமானம்
எதிரி சுடாமலேயே
இறகொடிந்து இறந்ததாம் - என்ன?

ஆ) தலைபோனால் மறைக்கும்
இடைபோனால் திரைக்கும்
கடை போனால் திதிக்கு
மூன்றும் ஒன்றும் சேர்ந்தால்
முந்தி ஒட்டம் பிடிக்கும் - அது என்ன?

5. அலுவலகக் கலைச்சொல்லுக்குத் தமிழாக்கம் தருக.

அ) Village Accountant ஆ) Token coin.

6. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

அ) சமூககாடுகள் வளர்ப்பு திட்டங்களை சமூக இயக்கமாக வளர்தெடுக்க வேண்டும்.

ஆ) இரவு வந்துவிட்டதாய் நினைத்து அவசரமாய் பூத்து சிரித்தபடிக் குளம் முழுக்க பூத்திருக்கும் செவ்வல்லிகள்.

Scanned with CamScanner

7. விடைக்கேற்ற வினா அமைக்க

அ) தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர் மாயூரம் வேதநாயகம் ஆவார்.

ஆ) இந்திய வானிலை ஆய்வுத்துறையினர் 2009-ஆம் ஆண்டைக் கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்தனர்.

8. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.

அ) விடிஞ்சதும் வீட்டுக்கொரு ஆள் அரிவாள், மம்பட்டியோட வடிவாய்க்காக் கரைக்கு வந்துடணும்

ஆ) "முதல்லே ஊரை ஒண்ணு கூட்டிக் காரியத்தை ஆரம்பி, மத்ததை நீயே தெரிஞ்சுக்குவே"

9. சரியான நிறுத்தற் குறியிட்டு எழுதுக

அ) என்னது ஏன் என்னம்மோ மாதிரி இருக்க மாமா உடம்புகிடம்பு சரியில்லையா

ஆ) வெள்ளப் பெருக்குக் காலங்களில் அடுக்குப் படிவம் நீரை உறிஞ்சுவதால் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது குறையும் நீர் மாசடைவதைத் தடுக்கும் மண் அரிப்பைத் தடுக்கும் வறட்சி காலங்களில் நீர்மட்டம் குறைந்து விடாமல் பாதுகாக்கும்

II. அனைத்திற்கும் விடையளி

10. மழை பெய்யும் போது மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும் போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிக்காக உங்கள் பள்ளித் தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதுக. 1x6=6

Scanned with CamScanner

குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெலஸ்டின்

11. எண்ணங்களை எழுத்தாக்குக. 1×4 = 4



12. 'சொன்னோன்' – இச்சொல்லின் வேர்ச் சொல், தொழிற்பெயர், வியங்கோள் வினைமுற்று, வினாச் சொல் தருக. 1×2 = 2

எம்.ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி
நாகர்கோவில் – 4
9843448095
15/04/2020

Scanned with CamScanner

1

# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 5

## மொழிப்பயிற்சி

## விடைகள்

இமை தமிழமுது

எம்.ஏ. ஜெஸ்டின்

வகுப்பு: 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 30

I. அனைத்திற்கும் விடை தருக 9x2 = 18

1. அ) விழிப்பூட்டல்
   ஆ) சுற்றுச்சூழல் பேரறிவு

---

2. அ) நடைமேடை
   ஆ) பயணச்சீட்டு ஆய்வர்

---

3. அ) அலை, அளை, அழை

அலை - நீர்நிலை ; அளை - புற்று/தயிர்/பிசை ; அழை - கூப்பிடு

கடலலையில் குளிக்க சென்ற குமரன் அளையில் இருந்த அரவும் தீண்ட எத்தனைமுறை அழைத்தும் பேச்சுமூச்சின்றிக் கிடந்தான்

ஆ) கலை, களை, கழை

கலை - நுட்பம்/ஆடை/கல்வி/கலைமான் ; களை - நீக்கு/அழகு ; கழை - மூங்கில்

கழை காட்டில் தீப்பிடித்ததால் களை செடிகளுடன் சேர்ந்து கலைமான்களும் தீக்கிரையாகின.

---

4. அ) ஈ.சல்
   ஆ) குதிரை

---

5. அ) கிராமக் கணக்கர்
   ஆ) ஒப்பு நாணயம்

---

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



6. அ) சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைச் சமூக இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும்.

ஆ) இரவு வந்துவிட்டதாய் நினைத்து அவசரமாய்ப் பூத்துச் சிரித்தபடி குளம் முழுக்கப் பூத்திருக்கும் செவ்வல்லிகள்

---

7 அ) தமிழின் முதல் நாவல் எது? அதனை இயற்றியவர் யார்? (அல்லது) மாயூரம் வேதநாயகம் அவர்கள் இயற்றிய நாவல் எது? அதன் சிறப்பு யாது?

ஆ) இந்திய வானிலை ஆய்வுத்துறையினர் 2009-ஆம் ஆண்டைக் குறித்து அறிவித்தது என்ன?

---

8. அ) விடிந்ததும் வீட்டிற்கு ஒரு ஆள் அரிவாள், மண்வெட்டியுடன் வடிவாய்க்கால் கரைக்கு வந்து விட வேண்டும்.

ஆ) முதலில் அவரை ஒன்றாகக் கூட்டிச் செயலைத் தொடங்கு, மீதியை நீயே தெரிந்து கொள்வாய்.

---

9. அ) "என்னது, நீன் என்னம்மோ மாதிரி இருக்க மாமா, உடம்பு கிடம்பு சரியில்லையா?"

ஆ) வெள்ளப் பெருக்குக் காலங்களில் அடுக்குப் படிவம் நீரை உறிஞ்சுவதால் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது குறையும்; நீர் மாசடைவதைத் தடுக்கும்; மண் அரிப்பைத் தடுக்கும்; வறட்சி காலங்களில் நீர் மட்டம் குறைந்து விடாமல் பாதுகாக்கும்.

---

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

திருமதி தமிழரசு — எம்.ஏ. ஜெஸ்டின்

II. அணைத்திற்கும் விடையளி

10. அனுப்புநர் 1×6 = 6

xxxxx,
நிலை : 12 'அ' பிரிவு,
அரசு மேல்நிலைப்பள்ளி,
கோயம்புத்தூர் - 2.

பெறுநர்

உயர்திரு. தலைமையாசிரியர் அவர்கள்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
கோயம்புத்தூர் - 2

பொருள் : மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தல் வேண்டி

ஐயா!

வணக்கம். நான் தங்கள் பள்ளியில் 12-ஆம் வகுப்பு 'அ' பிரிவில் பயின்று வருகிறேன். தற்போது மழைக்காலமாக இருப்பதால் நம் பள்ளியில் பயிலும் மாணவர்கள் அனைவரும் மழைக்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வைப் பெற வேண்டியது அவசியமாகும்.

எனவே, மழை பெய்யும் போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், அரசின் அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த போதிய விழிப்புணர்வை உரிய நபர்கள் மூலம் வழங்கினீர்கள் என்றால் எங்களுக்கு மிகுந்த நன்மையாக இருக்கும்.

ஆகவே, தாங்கள் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து அனைத்து மாணவர்களுக்கும் போதிய விழிப்புணர்வைப் பெற உதவிடுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர்
07.07.2020.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
xxxx

Scanned with CamScanner

இனி தமிழமுது

எம்.ஏ. ஜெலஸ்டின்

11. எண்ணங்களை எழுத்தாக்கு 1 × 4 = 4

* பூமி இன்று அழுகின்றது
பச்சை பட்டாடை உடுத்திய என்னை
வெம்மை காட்டில் வீசியது ஏனோ...?

* பருவம் தவறாமல் மழையைத் தந்தேன்
வளமாய் வாழ நிலம் தந்தேன்
சுயநலத்திற்காக வளமான
காட்டை அழித்து என்னைக்
கட்டாந்தரை யாக்கியது ஏனோ...?

* வெப்பமிகுதியால் என்மேனி சூடாகிறது
குளிர்விக்க நீ
ஒரு மரமாவது நடுவாயா...?
அனலாய் கொதிக்கிறது என் உடல்
கொஞ்சமாவது என்னைக் காப்பாயா....?

* நஞ்சாகும் நெகிழியைத் தவிர்த்திடு
என் மேனியின் சூட்டைக் குறைத்திடு
வளமான என்னைக் காத்திடு
வரும் தலைமுறையும் வாழ வழிவிடு

12

வேர்ச்சொல் – சொல்
தொழிற்பெயர் – சொல்லுதல்
வியங்கோள் வினைமுற்று – சொல்லுக
வினாச்சொல் – சொல்வாயா?

எம்.ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப்பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095
15/04/2020

Scanned with CamScanner

# இயல் - 2

1

## உள்நிலைத் தேர்வு - 6

செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம்

[குறுவினா, சிறுவினா, நெடுவினா, மனப்பாடல்]

நிமிர் தமிழமுது

எம்.ஏ. ஜெலஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 1 மணி மதிப்பெண்: 50

I. குறுவினா 6x2 = 12

1. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
2. 'நெடுநல்வாடை' - பொருள் விளக்கம் தருக.
3. பசுமைக் குடில் வாயுக்கள் யாவை?
4. வெள்ளைச்சமவெளி என்றால் என்ன?
5. ஒரு மொழியின் அடிப்படை அறிவு என்பது யாது?
6. 'பத்துத் தேங்காய்கள்' என ஏன் எழுதுவதில்லை?

II. சிறுவினா 4x4 = 16

7. புதுப்பெயலின் குளிரால் நிகழ்ந்தவையாக நெடுநல்வாடைக் குறிப்பிடுக.
8. வெயில் கண்ட பறவைகள் உற்சாகம் மீறிட சிங்கீதம் இசைக்கின்றன - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
9. மழை வெள்ள பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
10. பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டியவைப் பற்றி விவரிக்க.

III. நெடுவினா 3x6 = 18

11. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைத் தொகுத்து எழுதுக.

Scanned with CamScanner

எம்.ஏ. ஜெலஸ்டின்

12. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசருடன் நீங்கள் நடத்திய கற்பனை கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

13. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க.

## IV. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக 1×4=4

14. 'வையகம் பனிப்ப' - எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடல்.

எம். ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095
16 04/2020.

Scanned with CamScanner

இயல் - 2

1.

உள்நிலைத் தேர்வு - 6

செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம்

[குறுவினா, சிறுவினா, நெடுவினா, மனப்பாடம்]

விடைகள்

குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெயலஸ்டின்

வகுப்பு: 12

நேரம் : 1 மணி

மதிப்பெண் : 50

I. குறுவினா 6×2=12

1. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரம்

மழைக்காலப் பகற்பொழுதில் சூரியனின் வெளிச்சம் இல்லாமல் நகரமானது மழைமேகத்தால் இருள் சூழ்ந்து காணப்படும். மழை பெய்து ஓய்ந்த பின்பு, மழைக்கான சுவடுகள் அழிந்த பின்பு சூரியன் திடீரென தன் முகத்தைக் காட்ட, மழை மேகத்தால் மறைந்திருந்த நகரம் பிரகாசமாய்க் காட்சியளிக்கின்றது. இன்னும் உறிஞ்சப்படாமல் இருக்கும் ஒரு சில மழைத்துளிகளின் மீது விழுகின்ற சூரியக் கதிர்களின் பிரதிபலிப்பால் நகரமே பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகக் காட்சியளிக்கின்றது.

2. 'நெடுநல்வாடை' - பொருள் விளக்கம்

போருக்குச் சென்றிருக்கும் தலைவனைப் பிரிந்த தலைவிக்கு வாடைக் காற்று துன்ப மிகுதியைக் கொடுத்ததால் நெடுவாடையாக (நீண்ட வாடையாக) இருந்தது

போர் பாசறையில் இருந்த தலைவனுக்கு வெற்றிபெற ஏதுவான வாடைக்காற்றாக இருந்து இன்பத்தைக் கொடுத்ததால் நல்வாடையாக இருந்தது.

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



குமரி தமிழருக்கு — எம்.ஏ. ஜெயலஸ்டின்

3. பசுமைக் குடில் வாயுக்கள்

கார்பன்-டை-ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு போன்றவைகளைப் பசுமைக் குடில் வாயுக்கள் என்பர்.

4. வெள்ளச் சமவெளி

வெள்ளச்சமவெளி என்பது ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய ஒரு காப்பரணாகும்.

5. ஒரு மொழியின் அடிப்படை அறிவு

ஒரு மொழியின் அடிப்படை அறிவு என்பது அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும், சொற்களையும், அவற்றின் பொருள்களையும், வாக்கிய அமைப்புகளையும் அறிந்திருப்பதே ஆகும்.

6. அஃறிணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெறுவது கட்டாயம் இல்லை, ஆதலால், 'பத்துத் தேங்காய்' என எழுதுகின்றோம்.

II. சிறுவினா 4×4=16

7. புதுப்பெயலின் குளிரால் நிகழ்ந்தவை

மிகுந்த குளிரினால் கோவலர்கள் பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர். விலங்குகள் மேய்ச்சலை மறந்தன. குரங்குகளின் உடல் குளிரால் கூனிப் போயின. பறவைகள் குளிரால் நடுங்கி மரத்தின் மீதிருந்து கீழே விழுந்தன. கன்றுகளுக்குப் பால் கொடுக்கும் பசுக்கள் பால் குடிக்க வரும் கன்றுகளைத் தவிர்த்ததுடன் உதைத்தும் தள்ளின. குன்றையே குளிர்விப்பது போலக் குளிர் இருந்தது.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com





8. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம்

இடம் :

கவிஞர் அய்யப்ப மாதவனின், 'அய்யப்ப மாதவன் கவிதைகள்' என்னும் தொகுப்பில் உள்ள பிறகொரு நாள் கோடை என்னும் தலைப்பில் இக் கவிதைவரி இடம் பெற்றுள்ளது.

பொருள் :

வெயிலைக் கண்ட பறவைகள் உற்சாகத்தால் சங்கீதம் இசைக்கின்றன.

விளக்கம் :

சூரியன் திடீரெனத் தோன்றியதும் மழை பெய்த சுவடு மறைகிறது. நீர்த்துளிகள் மறைய வானம் மேகம் நீங்கி வெளிச்சம் பெறுகிறது. அதனால் வெயிலைக் கண்ட பறவைகள் மகிழ்ந்தன. தங்கள் துயர் நீங்கிய போது உற்சாகம் பீறிட ஒலி எழுப்புகின்றன. இதனைக் கவிஞர் "பறவைகள் உற்சாகம் பீறிட சங்கீதம் இசைக்கின்றன" என்கிறார்.

9. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை

வெள்ளப் பெருக்கை எதிர் கொள்ளும் விழிப்புணர்வு பரப்புரையைச் செய்தல் வேண்டும். நீர்நிலைகளை முறையாகப் பராமரித்தலுடன் நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு நீர் வழிப் பாதைகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும்.

இயற்கையாகவே பெருமழையைத் தாங்கக் கூடிய குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால், வாய்க்கால்கள் மற்றும் வெள்ளச் சமவெளிகளைச் சேதப்படுத்தாமல் இருப்பதே சிறப்பாகும். வெள்ளச்சமவெளிகளை முறையாகப் பராமரித்தால் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது குறையும். மழைவெள்ளம் குறித்த போதிய விழிப்புணர்வைத் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மூலமாக அனைத்துப் பொதுமக்களுக்கும் கொடுத்தல் வேண்டும்.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

குமரி தமிழமுது — எம்.ஏ. ஜெஸ்டின்

10. பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டியவை:

பேரிடர் வந்துவிட்டால் பதட்டமடைவதைத் தவிர்க்க வேண்டும். வானிலை ஆய்வு மையம் அவ்வப்போது வெளியிடுகின்ற புயல் மற்றும் மழை தொடர்பான தகவல்களின் அடிப்படையில் மக்கள் செயல்பட வேண்டும். வதந்திகளை நம்பவோ, பரப்பவோ கூடாது.

அரசுடன் இணைந்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை, காவல் துறை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இவற்றின் உதவியுடன் மீட்பு, பாதுகாப்பு முதலான பணிகளில் ஈடுபடுவதுடன் பாதுகாப்பு மையங்களையும், மருத்துவக் குழுக்களையும் அருகிலேயே வைத்திருக்க வேண்டும்.

III. நெடுவினா

3x6=18

11. நெடுநல்வாடை காட்டும் மழைக்கால வருணனை

புதுமழை:

* மேகம் தான் தங்கி இருந்த பெரிய மலையை வலமாகச் சுற்றிக்கொண்டு, விண்ணில் எழுந்தது.
* அதனால், உலகம் குளிர்ச்சி பெறுமாறு புதிய மழையைப் பொழிந்தது.
* எனவே, தாழ்வான பகுதிகளில் பெருவெள்ளம் கரை புரண்டது.
* காற்றும் மழையும் தொடர்ந்ததால், பருவநிலை மாறியது.

வாழ்வு மாற்றம்:

* தாழ்வான பகுதிகளில் பெருவெள்ளம் சூழ்ந்ததால், தாழ்வான பகுதிகளில் வாழ்ந்த கோவலர்கள், பெருகிவந்த வெள்ளத்தை வெறுத்தனர்.
* தங்களது ஆநிரைகளோடு மேடான நிலங்களைத் தேடினர்.
* அவற்றைக் காப்பதற்கும், மேய விடுவதற்கும் தாம் முன்னர் வாழ்ந்த தாழ்வான பகுதியில் இருந்து புலம் பெயர நேர்ந்தது.

குளிர்கால வாழ்வு:

* பெருமழை பெய்த குளிர்காலத்தில், ஆயர்கள் சூடியிருந்த காந்தள்மலர் மாலைகள் கசங்கின.
* மலையே குளிரால் நடுங்கியது.

Scanned with CamScanner

* பாதுகாப்பைத் தேடிய ஆயர்கள் பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர்.
* விலங்குகள் மேய்ச்சலை மறந்தன.
* குரங்குகளின் உடல் குளிரால் கூனிப்போயின.
* பறவைகள் குளிரால் நடுங்கி மரத்தின் மீதிருந்து கீழே விழுந்தன.
* கன்றுகளுக்குப் பால்கொடுக்கும் பசுக்கள் பால் குடிக்க வரும் கன்றுகளைத் தவிர்த்ததுடன் உதைத்தும் தள்ளின.

இவ்வாறாக நெடுநல்வாடையில் மழைக்கால வருணனையை நக்கீரர் குறிப்பிடுகிறார்.

---

12. ## நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து:

### நமது கடமை:

* எல்லா வளமும் கொண்டு மங்காப் புகழுடன் நிலைத்து நிற்கும் அழகிய இந்தப் பூமியை நாம் அரவணைத்திட வேண்டாம். குறைந்தபட்சம் அதன் அழகைச் சிதைக்காமல் இருந்தாலே போதும்.
* நெகிழியை இன்று பயன்படுத்துவதால் அழகான பூமி கொஞ்சம் கொஞ்சமாகத் தன் அழகை இழந்து வருகிறது.
* பூமியை இன்று மலடாக்கும் மகத்தான பணியை நாம் பயன்படுத்தும் நெகிழி மிகச் சரியாகச் செய்து வருகின்றது.
* எழிலோவியமான இப்புவியானது நாம் மட்டுமே வாழ்ந்து அழித்துவிட்டுச் சென்றிட நமக்கு உரிமையானது அல்ல.
* பரந்த இந்தப் பூமிக்கு நாம் வாடகைக்காரர்களே!
* என்ன வளத்துடன் இந்த நிலத்தை நமது முன்னோர்கள் நம்மிடம் தந்தார்களோ? அதே வளத்துடன் நாம் நம் வருங்காலத் தலைமுறைக்குக் கொடுப்பது நமது கடமையாகும்.

### நெகிழியைத் தவிர்ப்போம்:

* வேலைக்கு எளிதாக இருக்கின்றது; பயன்படுத்த இலகுவாக இருக்கின்றது என்ற நிலையில் நினைக்கும் நாம் அதனால் ஏற்படும் இழப்பினை நினைத்துப் பார்க்க மறுக்கின்றோம்.

Scanned with CamScanner

இனி தமிழமுது

எம்.ஏ.ஜெஸ்டின்

* இரசாயன முறையில் தயாரிக்கப்படும் நெகிழிப் பொருட்கள் பூமியை மெல்ல மெல்ல அழிக்கும் சக்தி படைத்தது என்பதை மறந்து போகின்றோம்.
* நெகிழி என்னும் எமனைப் பல வடிவங்களில் பல வண்ணங்களில் நமது வீடுகளில் நாமே வாங்கி வைத்திருக்கின்றோம்.
* நெகிழி அரக்கனின் கையில் அகப்பட்டுள்ள நிலமகள் தன் வளமையை இழந்து, தன் அழகை இழந்து போவதைக் கண்டும் காணாமல் இருக்கிறோம்.

மாற்றம் காண்போம்:

* தன்னையும் தன்னைச் சார்ந்தவரையும் தன் சந்ததியையும் திட்டமிட்டே அழிக்க வேண்டாத பொருளை விரும்பி பயன்படுத்தும் ஒரே குலம் மனித குலமே.
* நாம் பயன்படுத்தி வீசி எறியும் நெகிழிப் பைகள் பூமியே குப்பையாக; பூமிக்குப் பாரமாக; இயற்கைக்குத் துரோகமாக இருப்பதை நாம் ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கின்றோம்.
* சாதாரணமாக வீசி எறியும் ஒரு 'நெகிழிப் பை' கூட பூமியின் வளத்தைச் சிதைக்கும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நெகிழிகள் அழியாமல் இருந்து கொண்டு பூமியை அழித்து வருகின்றது.
* மண்ணின் உயிர் வேதியியல் தன்மையைக் கெடுத்து நிலத்தை மலடாக்கிடும். நெகிழியை நாம் பயன்படுத்தலாமா?

பூமிக்கும் உயிருண்டு:

* இந்தப் பூமியும் நம்மைப் போன்ற ஒரு ஜீவனே என்பதை அறிய வேண்டும்.
* இந்தப் பூமியை நாம் சிதைக்காமல் இருந்தால் நம் தலைமுறையினரும் மகிழ்வர்.
* நம்மால் இயன்றது பூமியைக் கொஞ்சமாவது நேசிப்பதாகும்.
* நம்மால் முடியும் என்று நினைத்தால், நெகிழிப் பொருட்களைப் பயன்படுத்த மாட்டேன்; அதன் பயன்பாட்டைத் தவிர்ப்பேன்; வளமான பூமியைக் காப்பேன் என்ற உறுதிமொழியை எடுப்போம்.
* பூமியின் வளத்தைச் சிதைக்கும் பூமியை மலடாக்கும் நெகிழியைத் துறப்போம்; வளமான நிலத்தைப் பாதுகாப்போம்.

Scanned with CamScanner

Test no 2 Page 324.

7

திருமதி தமிழமுது

எம்.ஏ. ஜெயஸ்டின்.

13. கடிதம்

அனுப்புநர்

ஊர்ப் பொதுமக்கள்
2, வள்ளுவர் வீதி
வேலூர் - 4.

பெறுநர்

மேலாளர் அவர்கள்
மின்வாரிய அலுவலகம்
வேலூர் உட்கோட்டப்பிரிவு
வேலூர் - 1.

ஐயா,

பொருள் : மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோருதல் - குறித்து.

வணக்கம். எங்கள் பகுதியில் ஏறத்தாழ 250 குடியிருப்புகள் உள்ளன. சமீபத்தில் பெய்த புயல் மழையினால் எங்கள் பகுதியில் இருந்த பெரிய பெரிய மரங்கள் சாய்ந்தன. மின்கம்பங்களுக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டது.

மின் கம்பங்கள் சாய்ந்ததால் மின்கம்பிகள் அறுந்து குடியிருப்பின் அருகிலே கிடக்கின்றன. ஏறத்தாழ பத்து நாட்களுக்கு மேலாக மின்சாரம் இல்லாமல் சிரமப்படுகின்றோம்.

மின்வசதி இல்லாததால் அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. மாணவர்கள், வயதானவர்கள், குழந்தைகள் மிகவும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, மிக விரைவில் போர்க்கால நடவடிக்கையாக அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்து தரும்படித் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு
ஊர்ப் பொதுமக்கள் சார்பாக
ச. முத்துலிங்கம்

10-08-2020
வேலூர் - 4.

Scanned with CamScanner

முன்னுரை:

உத்தம சோழன் எழுதிய 'முதல்கல்' என்ற சிறுகதையின் கதாபாத்திரம் மருதன். ஊர்நலன் கொண்டவன். பெருமழை பெய்து வெள்ளமானது வடியாமல் இருப்பதைப் பார்த்து, எல்லோரும் இணைந்து செயல்பட்டால் வெள்ளத்தில் மூழ்கும் நெற்பயிர்களைக் காப்பாற்றி விடலாம் என்ற எண்ணத்தில் செயல்பட்ட மருதனின் பண்பு நலன்களைக் காண்போம்

பயிர்களின் பாதுகாவலன்

காவிரியின் கடைமடைக்காரர்கள் 'குறுவை'யை மறந்து 'சம்பா' நட்டு தண்ணீருக்காக, எந்தத் தண்ணீரை நம்பியிருந்தார்களோ அஃது இப்போது பெருமழையாகக் கொட்டித்தீர்த்த பிறகு, இப்போதுதான் வளர ஆரம்பித்திருந்த நெற்பயிர்கள் எல்லாம் தண்ணீரில் மூழ்குவதைக் கண்டதும் மனம் வேதனை அடைகின்றான்.

ஒவ்வொரு நபர்களிடம் கூறியும் அன்று இரவுவரை எதுவுமே நடக்கவில்லை என்று அவனது மனம் வேதனை அடைகின்றது. இரவு தூங்கும் போது தூக்கம் வரவில்லை. நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த நெல் பயிர் அத்தனையும் "என்னைக் காப்பாத்து, என்னைக் காப்பாத்து", என்று அவனைப் பார்த்து கெஞ்சுவதாக உணர்கிறார்.

ஊர்நலனில் அக்கறை:

வடிவாய்க்கால் முழுவதும் சுவர் வைத்தாற்போலத் தடுத்திருந்த காட்டாமணக்குச் செடிகளை அப்புறப்படுத்திவிட்டால், பயிர்கள் மூழ்காமல் மொத்த கிராமத்தையும் காப்பாற்றலாம் என்ற எண்ணம் வந்ததும், மருதன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எப்படியாவது உபரி நீரை ஒரே நாளில் வடித்து ஊரைக் காப்பாற்றிவிடலாம் என்ற எண்ணம் அவனிடம் வந்ததும் அவன் தனிமையாக அந்தச் செயலைச் செய்யாமல் அனைவருடனும் இணைந்து செய்ய வேண்டும் என்ற ஆர்வம்

Scanned with CamScanner

குமரிதமிழமுது

எம். ஏ. ஜெலஸ்டின்

4.

மேலிட ஒவ்வொருவரிடமும் உதவியைக் கேட்கும் உத்தம குணம் கொண்டவனாக மருதன் திகழ்கிறான்.

## கடமையே கண்ணாகக் கொண்டவன்:

உதவிக்காக அவன் மாரியிடம் கேட்கும் போதும்; பெரிய மிராசாக வலம் வரும் காளிப்பனிடம் பேசும்போதும்; கிராமத்தின் முதல் பட்டதாரியான பிரேம்குமாரிடம் விவரத்தை விளக்கும் போதும்; தன் ஆற்றாமையைத் தன் மனைவி அல்லியிடம் கூறும் போதும் அவன்தன் கடமையில் கொண்டிருந்த உறுதிப்பாடு புலனாகும். தான் தனியாளாகச் செய்ய முடியாத இச்செயலுக்கு எல்லோரின் உதவியையும் நாடும் பொதுநலவாதியாக மருதன் காணப்படுகின்றான்.

## மருதனின் பொறுப்பான குணம்:

தனக்கென அந்த ஊரில் ஒரு 'சக்கரைக்குழி' அளவுகூட நிலம் இல்லாதவன் பொதுநலனைக் கருத்தில் கொண்டு, எப்படியாவது நீரை வடித்துவிட வேண்டும் என்ற ஆதங்கத்துடன் மருதன் இருக்கின்றான். மருதன் சுயநலத்திற்காகச் செயல்படவில்லை, மாறாகப் பொறுப்பற்றிருந்த அவ்வூர் மக்களுக்குப் பொறுப்பு வரவேண்டும் என்ற எண்ணமே அவனிடம் இருந்தது.

## பொறுப்பை உணர்த்திய வழிகாட்டி:

இரவு முழுவதும் தூக்கமில்லாமல் தவித்தவன். விடிவதற்குமுன் தனியாளாய் வடிவாய்க்காலில் இறங்கி காட்டாமணக்குச் செடியை அப்புறப்படுத்தும் அவனது செயலைக் கண்ட அவன் மனைவி அல்லியும் உடன் உதவிக்கு வர, இதை பார்க்கும் வலைபோட்டுக் கொண்டிருந்த மாரிமுத்துவும் அவனுடன் இணைய, மிரசு காளியப்பனும் வடிவாய்க்காலில் இறங்க ஊரே ஒன்றாகக் கூடி வந்து காட்டாமணக்குச் செடியை ஆர்வமாக அப்புறப்படுத்த வழிகாட்டினான் மருதன்.

## முடிவுரை:

சொல்லிக் கொண்டிருக்காமல் நாமே செயலில் இறங்கினால் வெற்றி பெறலாம் என்ற உயர்ந்த குணம் உடையவனாக மருதன் விளங்குகின்றான். நமக்கு ஏன் வீண் வம்பு என்று ஒதுங்காமல் பொறுப்பற்றிருந்த கிராம மக்களுக்குப் பொறுப்பை உணர்த்தினான் மருதன்.

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com





எம்.ஏ. ஜெலஸ்டின்

## IV. மனப்பாடப் பாடல் 1x4 = 4

14. வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர்அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க..

எம்.ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095
16/04/2020

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 7

## இலக்கணம், மொழிப்பயிற்சி

குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 50

I. அனைத்திற்கும் விடை தருக 25x2 = 50

1. இலக்கணக் குறிப்பு தருக
   அ) புதுப்பெயல் ஆ) வணங்கி

2. பகுபத உறுப்பிலக்கணம் தருக
   அ) கலங்கி ஆ) ஏந்தி

3. புணர்ச்சி விதி தருக
   அ) இணநிரை ஆ) புதுப் பெயல்

4. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

5. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

6. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

7. அஃறிணைப் பன்மைப் பெயர்கள் எவ்வாறு முடியும்?

8. பலர்பால் சொல் பழந்தமிழில் எவ்வாறு வழங்கி வந்துள்ளது.

9. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக
   அ) விலை, விளை, விழை ஆ) காலை, காளை

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



குமரி தமிழமுது எம்.ஏ. ஜெவஸ்டின்

10. தமிழாக்கம் தருக.

அ) Generation ஆ) democracy இ) Metro Train ஈ) Platform

11. கலைச்சொல் தருக.

அ) Chitta ஆ) Booth.

12. சரியான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

அ) ஐப்பசி அடை மழை கார்த்திகை கனமழை என்பது சொலவடை

ஆ) அறிவியல் கருத்தாளர் ஸ்டீவ் கிங் புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

13. வல்லினமெய் இட்டும் நீக்கியும் எழுதுக

அ) திரும்பி பார்க்காமல் நடக்க தொடங்கினான்.

ஆ) நம் நாட்டில் வெள்ளபெருக்கு காலங்களில் மட்டும் மாற்று ஏற்பாடுகளைச் செய்கிறோம்.

14. விடைக்கேற்ற வினா அமைக்க

அ) சரியான திட்டமிடலின்றி உருவாக்கப்படும் பெருநகர அமைப்பு, நீர் மேலாண்மையில் கவனம் செலுத்தாமை இவற்றால் மழைக்காலங்களில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது.

ஆ) 19 - ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக் கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் என்று அழைத்தனர்

15. தொடரில் உள்ள வாக்கியப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) பயனிலை விகுதிகளான ஆன், ஆர், ஆள், அது, அன் ஆகியவை பால் பகுப்பைக் காட்டுகின்றது.

ஆ) நாம் தான் சாப்பிட்டோம்.

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

16. இணைச்சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
அ) பாயும் படுக்கையும் ஆ) வடக்கும் தெற்கும்.

17. தமிழாக்கம் தருக.
அ) Education is the most Powerful ~~way~~ weapon, which you can use to Change the world.
ஆ) Too much of anything is good for noting.

18. எழுத்துப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) வாளை இழை பரித்து வந்து விருந்தினர்க்குப் பரிமாற வேண்டும்.
ஆ) அவர் எண்ணையும் வெண்ணையும் வாங்கி வந்தார்.

19. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக
அ) காட்டில் யானை கத்தியது நரி கூவியது.
ஆ) தென்னை இலையால் கீற்று முடைவார்கள்

20. கொச்சைச்சொற்களை நீக்கி எழுதுக
அ) அந்த வூட்டுக்குக் கொடக்கூலி எவ்வளவு?
ஆ) பசுமாடு கன்றைப் போட்டது

21. பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.
அ) என்ன பாவம் செஞ்சோமோ இந்த ஊர்ல வந்து பொறந்து தொலைச்சிட்டோம்.
ஆ) வெரசா வா மழை வர மாரி இருக்குது.

22. மரபுத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக
அ) ஆகாயத் தாமரை ஆ) கயிறு திரிக்கிறான்.

23. உவமைத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக
அ) நீர்மேல் எழுத்துப் போல
ஆ) தவளை தன் வாயால் கெட்டது போல

Scanned with CamScanner

குமரி தமிழ்முரசு எம்.ஏ. ஜெலஸ்டின்

24. வடமொழிச் சொற்களை நீக்கி நல்ல தமிழ்ச் சொற்களால் எழுதுக.

அ) ஜனங்களை உஷாராக இருக்குமாறு ஜில்லா போலீஸ் அதிகாரி கூறினார்

ஆ) கும்பாபிஷேகம் முடிந்தவுடன் எல்லாரும் நமஸ்காரம் செய்து அநுக்கிரகம் பெற்றனர்.

25. கீழ்க்காணும் சொற்களுக்கு வேர்ச்சொல், தொழிற்பெயர், வினையெச்சம், வினையாலணையும் பெயர் எழுதுக.

அ) தொழுதான் ஆ) அழுதான்.

எம்.ஏ. ஜெலஸ்டின்,
முதுகலைத் தமிழாசிரியர்,
கார்மல் மேல்நிலைப் பள்ளி,
நாகர்கோவில் - 4
9843448095
18/04/2020

# இயல் - 2

## உள்நிலைத் தேர்வு - 7

## இலக்கணம், மொழிப்பயிற்சி

## விடைகள்

குமரி தமிழமுது

எம். ஆ. ஜெஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 50

I. அனைத்திற்கும் விடை தருக.

1. அ) பண்புத்தொகை

ஆ) சொல்லிசை அளபெடை

2. அ) கலங்கி - கலங்கு + இ

கலங்கு - பகுதி

இ - வினையெச்ச விகுதி

ஆ) ஏந்தி - ஏந்து + இ

ஏந்து - பகுதி

இ - வினையெச்ச விகுதி

3. அ) இனநிரை = இனம் + நிரை

'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்'

ஆ) புதுப்பெயல் = புதுமை + பெயல்

(i) ஈறு போதல் - புது + பெயல்

(ii) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' - புதுப்பெயல்

4. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன, திணை, பால், எண், இடம் ஆகியனவாகும்.

Scanned with CamScanner

குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெலஸ்டினா

5. * நீங்கள் வீட்டிற்கு வாருங்கள்.
* அவர்கள் ஆலயம் வந்தார்கள்.

6. இடம் மூன்று வகைப்படும். அவை,
(i) தன்மை
(ii) முன்னிலை
(iii) படர்க்கை

7. அஃறிணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெறுவது கட்டாயமில்லை.
[எ:கா] - பத்து தேங்காய்.

8. ஐம்பால்களுள் பலர்பால் சொல், பழந்தமிழில் பன்மையிலும், சில வேளைகளில் உயர்வு கருதி ஒருமையிலும் வழங்கி வந்துள்ளது.
எ.கா:
மாணவர் வந்தனர். [பன்மை]
ஆசிரியர் வந்தார். [ஒருமை]

9. அ) கார்ப் பருவத்தில் நன்றாக விளைந்ததால், தானியங்களின் விலை குறையாமல் இருக்க, ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள விழைவதாக அரசு அறிவித்தது.
ஆ) உழவர்கள் காளை மாடுகளைக் காலையில் வயலுக்கு ஓட்டிச் சென்றனர்.

10. அ) தலைமுறையினர்
ஆ) மக்களாட்சி
இ) மாநகரத் தொடர்வண்டி
ஈ) நடைமேடை

11. அ) குறிப்பேடு
ஆ) Booth - சாவடி

Scanned with CamScanner

குமரி தமிழ்மொழி

எம்.ஏ. ஜெஸ்டின்

12. அ) 'ஐப்பசி அடை மழை! கார்த்திகை கனமழை!' என்பது சொலவடை.

ஆ) அறிவியல் கருத்தாளர் டேவிட் கிங் "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே" என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

13. அ) திரும்பிப் பார்க்காமல் நடக்கத் தொடங்கினான்.

ஆ) நம்நாட்டில் வெள்ளப் பெருக்குக் காலங்களில் மட்டும் மாற்று ஏற்பாடுகளைச் செய்கிறோம்.

14. அ) மழைக்காலங்களில் பெரும்பாதிப்பு ஏற்பட காரணம் என்ன?

ஆ) 'தாது வருடப் பஞ்சம்' எந்த நூற்றாண்டில் எந்தப் பகுதியில் ஏற்பட்டது? (அல்லது) 19-ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக் கொடிய பஞ்சம் எது?

15. அ) பயனிலை விகுதிகளான அன், ஆர், ஆள், அது, அன் ஆகியவை பால்பகுப்பைக் காட்டுகின்றது.

ஆ) நாம் தாம் சாப்பிட்டோம்

16. அ) பாயும் படுக்கையும்

முதுமையில் பாயும் படுக்கையுமாக இருந்த பெற்றோரை வினிதா நன்கு கவனித்தாள்.

ஆ) வடக்கும் தெற்கும்

காந்தம் எப்போதும் வடக்கும் தெற்குமாகத் திசையைக் காட்டும்.

17. தமிழாக்கம் தருக:

அ) கல்வி என்பது அதிக ஆற்றல் வாய்ந்த கருவி என்பதனைக் கொண்டு, நீ உலகையே மாற்றலாம்.

ஆ) அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com





18. எழுத்துப்பிழை நீக்குக

அ) வாழை இலை பறித்து வந்து விருந்தினர்க்குப் பரிமாற வேண்டும்.

ஆ) அவர் எண்ணெயும் வெண்ணெயும் வாங்கி வந்தான்.

19. மரபுப்பிழைகளை நீக்குக

அ) காட்டில் யானை பிளிறியது நரி ஊளையிட்டது.

ஆ) தென்னை ஓலையால் கீற்றுப் பின்னுவார்கள்.

20. கொச்சைச் சொற்களை நீக்குக.

அ) அந்த வீட்டுக்குக் குடிக்கூலி எவ்வளவு?

ஆ) பசு கன்றை ஈன்றது.

21. பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) என்ன பாவம் செய்தோமோ இந்த ஊரில் வந்து பிறந்து தொலைத்துவிட்டோம்.

ஆ) சீக்கிரமாக வா மழை வருவதைப் போன்று இருக்கின்றது.

22. மரபுத் தொடர்களை வாக்கியத்தில் அமைக்க

அ) ஆகாயத்தாமரை - இல்லாத ஒன்று

இலக்கியத்தில் பயின்றுவரும் அன்னப் பறவைகளுக்கு ஆகாயத் தாமரையை உவமையாக்குகின்றனர்.

ஆ) கயிறு திரிக்கிறான் - இல்லாததைச் சொல்கிறான்.

வானத்திலிருந்து ஒளிப்பிழம்பாகத் தட்டு வடிவில் ஒன்று இறங்கியது. உடல் முழுவதும் கவசம் அணிந்த இருவர் அதில் இருந்தனர். அருகினில் சென்று பார்ப்பதற்குள் அந்தத் தட்டு மேலே பறந்து விட்டது என ஒருவன் சொன்னான். அதைக் கேட்டவர்கள் கயிறு திரிக்கிறான் என்றார்கள்.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெலஸ்டின்

23. உவமைத் தொடர்களை வாக்கியத்தில் அமைக்க

அ) நீர்மேல் எழுத்துப் போல - நிரந்தரமற்றது.
குடிகாரனின் வாக்கு நீர் மேல் எழுத்துப் போலச் சொன்ன மாத்திரமே நீர்த்துப் போகும்

ஆ) தவளை தன் வாயால் கெட்டது போல - பேசியே ஆபத்தில் மாட்டிக் கொள்ளுதல்
தவளை தன் வாயால் கெட்டது போல இரு திருடர்களும் திருடிய பொருளை எங்கு மறைத்து

---

24. வடமொழிச் சொற்களை நீக்கி எழுதுக

அ) மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு மாவட்டக் காவல் அதிகாரி கூறினார்.

ஆ) குடமுழுக்கு முடிந்தவுடன் எல்லாரும் வணங்கிக் கடவுளின் அருளைப் பெற்றனர்.

---

25. அ) தொழுதான்
வேர்ச்சொல் - தொழு
தொழிற்பெயர் - தொழுதல்
வினையெச்சம் - தொழுது
வினையாலணையும் பெயர் - தொழுதவர்

ஆ) அழுதான்
வேர்ச்சொல் - அழு
தொழிற்பெயர் - அழுதல்
வினையெச்சம் - அழுது
வினையாலணையும்பெயர் - அழுதவர்

எம்.ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095
18/04/2020

Scanned with CamScanner